2011 பிப்ரவரி 10]

முற்பகல் 9-50

3. தகவல் கோரல்—தொடர்ச்சி

(ஈ) வால்பாறை, தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களை யானைகள் மிதித்துக் கொன்றது—தொடர்ச்சி

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கோவை தங்கம் என்ன சொல்லப் போகிறீர்கள்? மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல இருக்கிறார். (குறுக்கீடு) அப்போதே நீங்கள் சொல்லியிருக்கலாமே. (குறுக்கீடு) நான் சொல்வதைக் கேளுங்கள். உறுப்பினர் பெயர்களை நான் வாசிக்கப்போகிறேன். அவ்வளவு பேர்கள் கொடுத்திருக்கிறீர்கள். நேரத்தின் அருமை கருதி அந்தந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர்களை மாத்திரம் பேச அழைத்து நான் முடிக்கப்போகிறேன். மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம், ஆனைமலை, வால்பாறை பகுதியில் அமைந்துள்ள தமிழ்நாடு தேயிலைத் தோட்டக்கலை கழகத்திற்குச் சொந்தமான ரேயான் தோட்டத்தில் நேற்று பெண்கள் தேயிலையைப் பறித்துக் கொண்டிருந்தபோது, சுமார் 3¼ மணியளவில் ஒரு ஆண் யானை, இரண்டு பெண் யானைகள், ஒரு குட்டி யானை அந்தப் பகுதியில் மேய்ந்து கொண்டிருந்தன. குட்டி யானை இருக்கும்போது, அதைப் பாதுகாப்பதற்காக அந்த யானைகள் பதட்டம் அடைந்துவிடும். அந்தப் பதட்டத்தின் காரணமாக, அந்த மூன்று பெண்களையும், கதிர்ஜா, செல்லத்தாயி மற்றும் பரமேஸ்வரி ஆகியோரை யானைகள் தாக்கியதால் சம்பவ இடத்திலேயே அந்தப் பெண்கள் உயிர் இழந்திருக்கிறார்கள். உடனடியாக எனக்கு அந்தச் செய்தி கிடைத்தவுடன், தலைமை வனப் பாதுகாவலரைத் தொடர்புகொண்டு, என்ன நடந்தது எனக் கேட்டு, அதன் பிறகு தேயிலைத் தோட்ட இயக்குனர் பசுவராஜ், ஐ.எப்.எஸ். அவர்களையும் தொடர்பு கொண்டு, உடனடியாக நிவாரணத்தை வழங்க வேண்டுமென்று கூறினேன்.

[திரு. என். செல்வராஜ்] [2011 பிப்ரவரி 10

பொதுவாக, முதலில் ரூ.25,000/- கொடுத்துவிட்டு, அதன் பிறகு இறந்தவர்களுடைய வாரிசுகள் யார் யார் என்பதைப் பார்த்து அதன் பின்னரே முழுத் தொகையும் வழங்கப்படும். சென்ற ஆண்டுதான் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் நிவாரணத் தொகை ரூபாய் ஒரு இலட்சத்தை ரூ.1½ இலட்சமாக உயர்த்தித் தந்துள்ளார்கள். எனவே, மூன்று நபர்களுக்கும் சேர்த்து நிவாரணத் தொகையான ரூ.4½ இலட்சத்தை எடுத்துக்கொண்டு, இரவு எட்டு மணிக்கு எங்களுடைய தோட்டக்கலை இயக்குனர் சென்ற நேரத்தில், அந்த மக்கள் எல்லாம் பதட்டத்தின் காரணமாக அதனை வாங்க மறுத்திருக்கிறார்கள். அதன்பின் அவர்களை எல்லாம் சமாதானம் செய்து இரவு 12.00 மணியளவில் அந்த உடல்களையெல்லாம் அரசு மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றிருக்கிறார்கள். மேலும், அவர்கள் எங்களுடைய தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தினுடைய மேலாண்மை இயக்குனர் வந்தால்தான், மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப்போல அவரிடம் கட்டடங்கள் மற்றும் சாலைகள் போன்றவற்றைப் பழுதுபார்ப்பதாக உறுதிமொழியை வாங்கிக்கொண்டு செல்வோம் என்றிருக்கிறார்கள்.

நேற்று இரவே, தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தின் மேலாண்மை இயக்குனர் மதிப்பிற்குரிய திரு. கணேசன், ஐ.எப்.எஸ். அவர்களைத் தொடர்புகொண்டு உடனடியாக அங்கு செல்ல வேண்டுமென்று கூறினேன். அவரும் இன்று காலை 11-00 மணிக்குள் அங்கு சென்று நிலைமையை விளக்கிச் சொல்லி, பணத்தை பட்டுவாடா செய்து விடுவார். தொடர்ந்து அவர்கள் குறிப்பிடுவதைப்போல் எங்களுடைய கோட்டத்தைப் பொறுத்தவரையில் வீடுகள் பழுது பார்த்தல், சாலைகளைச் சரி செய்தல் போன்ற வேலைகளைச் செய்ய எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு, தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்திற்குச் சொந்தமான இடங்கள் பராமரிக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கெனவே நாங்கள் 95 கிலோ மீட்டர் தூரத்திற்கு சூரிய மின்வேலி அமைத்திருக்கிறோம் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம் அவர்களே குறிப்பிட்டிருக்கிறார்.

அடர்ந்த காடுகள் உள்ள பகுதியில் 958 சதுர கிலோ மீட்டர் தூரத்தில் யானைகள் காப்பகம், புலிகள் காப்பகம் அமைந்திருக்கின்றன. அடர்ந்த காடுகள் இருக்கின்ற காரணத்தால்

2011 பிப்ரவரி 10] [திரு. என். செல்வராஜ்]

அவை ஒன்றுக்கொன்று தொடர்புடையதாக இருக்கின்றன. அடர்ந்த காடுகள் இருக்கின்ற இடத்திலே வன உயிரினங்கள் வாழ்கின்றன. வன உயிரினங்கள் இருக்கின்ற காரணத்தினாலே அடர்ந்த காடுகள் இருக்கின்றன. அடர்ந்த காடுகள் இருக்கின்ற காரணத்தினால் சிறுத்தைகளால் தொல்லைகள் இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவில் உள்ள 24,000 யானைகளிலே, 12,000 யானைகள் தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா மற்றும் கர்நாடக மாநிலங்களில் வசிக்கின்றன. அவை மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் வசிக்கின்றன. அதன் காரணத்தினால்தான், வனவிலங்குகள் இப்போது வேட்டையாடப்படுவது குறைந்திருக்கின்ற காரணத்தினால் அவையெல்லாம் வெளியே வருகின்றன. மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் வகையில், உங்கள் மாவட்டத்தில் அகழிகள் அமைப்பதற்கு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் இப்போது ஒரு சிறப்பு நிகழ்வாக 4½ கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து, 80 கிலோ மீட்டர் தூரத்திற்கு அந்தப் பகுதியிலும் மற்றும் கிருஷ்ணகிரி பகுதியிலும் அகழிகள் அமைப்பதற்கு உடனடியான பணிகள் துவங்கப்படும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 9-55

திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம் அவர்கள் குறிப்பிட்ட அந்த நிகழ்வு குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன், திரு. தி. வேல்முருகன், திரு. சு.ப. வேலுமணி, திரு. சு. குணசேகரன், திரு. விடியல் எஸ். சேகர், திரு. கி. ஆறுமுகம், திரு. என். நன்மாறன், திரு. கு. பாண்டுரங்கன் ஆகியோர் அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். இதுசம்பந்தமாக திரு. கோவை தங்கம் அவர்கள் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் என்ற காரணத்தால் அவரை மாத்திரம் பேசச் சொல்லி இப்பிரச்சினையை முடிக்கிறோம், அவ்வளவுதான். (குறுக்கீடு) போதும் அவ்வளவுதான். (குறுக்கீடு) அங்கே போய் பாருங்கள், போங்கள். (குறுக்கீடு) அங்கே போய் பாருங்கள்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS